சுருக்கம்

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை – அரசுப் பொருட்காட்சி சேலம் மாவட்டம் 2009 – 2010 – ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அரங்கம் அமைத்து பங்கு பெற்றதற்கான செலவுத் தொகை ரூ.42,000/- (ரூபாய் நாற்பத்து இரண்டாயிரம் மட்டும்) விடுவித்து ஆணை வெளியிடப்படுகிறது.

---

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (ப.ரா-3) துறை

அரசாணை (நிலை) எண்.27 நாள்: 30.03.2010

படிக்கப்பட்டவை

1. அரசாணை (நிலை) எண்.145, தமிழ் வளர்ச்சி அறநிலையங்கள் மற்றும் செய்தி (பொருட்காட்சி) துறை, நாள் 19.06.09.
2. சேலம் மாவட்ட ஆட்சித் தலைவரின், ந.க.எண் வ1/6733/09 நாள் 26.02.10.
3. ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ், கடித ந.க. எண். 91575/09/NEDM-1 நாள் 15.03.10.

*******

ஆணை:

மேலே 1ல் படிக்கப்பட்ட அரசாணையில், சேலம் மாவட்டத்தில் நடைபெற்ற அரசுப் பொருட்காட்சியில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை சார்பாக அரங்கம் அமைத்து பங்கேற்பதற்காக செலவுத் தொகை ரூ.42,000/- (ரூபாய் நாற்பத்து இரண்டாயிரம் மட்டும்) க்கு அனுமதி வழங்கி ஆணை வெளியிடப்பட்டுள்ளது. மேலும் இத்தொகையினை சம்பந்தப்பட்ட தலைமைச் செயலக நிர்வாகத் துறைகள், துறை தலைவர்களிடமிருந்து கருத்துருக்கள் வரப்பெறுவதை எதிர்பார்த்து அனுமதித்து ஆணை வெளியிடுமாறு தமிழ் வளர்ச்சி அறநிலையங்கள் மற்றும் செய்தி (பொருட்காட்சி) துறை கேட்டுக் கொண்டுள்ளது.

2. மேலே 1-ல் படிக்கப்பட்ட அரசாணையில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறைக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ள ரூ.42,000/- (ரூபாய் நாற்பத்து இரண்டாயிரம் மட்டும்)த்தை 2009-2010-ஆம் ஆண்டில் சேலம் மாவட்ட அரசுப் பொருட்காட்சியில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை சார்பில் அரங்கம் அமைத்து பங்கேற்றதற்கு ஒப்பளிப்பு செய்தும், சேலம் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கு விடுவித்தும் அரசு ஆணையிடுகின்றது.

3. மேலே பத்தி 2-ல் ஒப்பளிக்கப்பட்ட தொகை கீழ்க்கண்ட தலைபின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

"2515.00 ஏனைய ஊரக வளர்ச்சித் திட்டங்கள் -001 நெறிப்படுத்தலும் நிருவாகமும் I திட்டத்தில் சேராதது – AA ஊரக வளர்ச்சி இயக்ககம் -08- விளம்பரமும் பிரச்சாரமும் 02- பொருட்காட்சி (து.தொ.கு..2515-00-001-AA 0824)"

4. இவ்வாணை நிதித்துறையின் அ.சா.கு.எண்.16007/ஊ.வ./10 –ல் நாள் 30.03.2010 இசைவு பெற்று வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

க.அஷோக் வர்தன் ஷெட்டி,
அரசு முதன்மைச் செயலாளர்.

<u>பெறுநர்</u>

ஆணையர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி, சென்னை-15
மாவட்ட ஆட்சித் தலைவர், சேலம் மாவட்டம்.
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை-35
மாநில கணக்காயர், சென்னை-9/18/35

<u>நகல்</u>
அரசு செயலாளர்,
தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தி
(பொருட்காட்சி)த் துறை சென்னை-9
தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம், சென்னை-2
நிதித்துறை, (ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை) சென்னை-9.
இருப்புக் கோப்பு/உதிரி நகல்

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.